# S.I.R.க்கு எதிராக அணி திரண்ட ‘இந்தியா’ கூட்டணியினர்!



திருச்சியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என வலியுறுத்தி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே மத்திய – வடக்கு – தெற்கு மாவட்டம் சார்பில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியினர் கலந்து கொண்ட மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினர். திருச்சி மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி தலைமையில், மாநகரச் செயலாளர் அன்பழகன் முன்னிலையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் காதர் மொய்தீன்,திருச்சிநாடாளுமன்ற உறுப்பினர் துரை வைகோ, முன்னாள் அமைச்சர் சுரேஷ் ராஜன் உள்ளிட்டோர் ஆர்ப்பாட்டத்தில் கண்டன உரையாற்றினர்கள்.




சேலம் மாவட்டம் கோட்டை மைதானத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக செயல்படும் இந்திய தேர்தல் ஆணையம் சிறப்பு தீவிர சீராய்வு S.I.R. –யைக் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் கண்டன ஆர்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி., தேர்தல் பொறுப்பாளர் ஈ.ஜி.சுகவனம், ஜி.கே.சுபாஷ், பா.ரகுபதி, டாக்டர். ஏ.கே.தருண், சின்னதுரை, ஏ.ஏ.ஆறுமுகம் மு.ரா.கருணாநிதி, உமாராணி, ரேகாபிரியதர்ஷினி உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




வேலூர் அண்ணா கலையரங்கம் அருகில் தெற்கு வடக்கு மாவட்டம் சார்பில் மத்திய ஒன்றிய அரசின் கைப்பாவையாக மாறிய தேர்தல் ஆணையத்தின் எஸ்.ஐ.ஆர்.ரைக் கண்டித்து நடந்த ஆர்ப்பாட்டத்தில் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. கலந்துகொண்டு பேசினார்கள். உடன் மாவட்ட அவைத்தலைவர்தி.அ.முகமதுசகி மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார் மற்றும் கூட்டணி கட்சியினர், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நாகையில் தி.மு.க உள்ளிட்ட அனைத்துக் கட்சிகள் சார்பில் தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (எஸ்.ஐ.ஆர்.) கொண்டுவந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து நாகை அவுரித்திடலில் மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




மயிலாடுதுறையில் தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகள் சார்பில் தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (எஸ்.ஜ.ஆர்.) கொண்டுவந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து மயிலாடுதுறையில் தலைமை தபால் நிலையம் எதிரே மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு கொண்டு வந்துள்ள, இந்திய தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து, ஆர்ப்பாட்டம், கரூர் மாவட்ட செயலாளர் வி.செந்தில் பாலாஜி வழிகாட்டுதலுடன், கரூர் தலைமை தபால் நிலையம் முன்பு மாவட்ட அவைத்தலைவர் டி. ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் கழக மாநில நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், எம்.எல்.ஏ.க்கள் இரா.மாணிக்கம், ஆர்.இளங்கோ. க.சிவகாமசுந்தரி உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள் தோழர்கள் ஆயிரக்கணக்கில் திரளாக கலந்து கொண்டனர்.



கடலூர் ஒருங்கிணைந்த மாவட்டக் கழகம் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் சார்பில், எஸ்.ஐ.ஆர்.ரைக் கண்டித்து, கடலூர் மஞ்சக்குப்பம், தலைமை தபால் நிலையம் எதிரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது, தேர்தல் பணிக்குழு செயலாளார் இள.புகழேந்தி, எம்.கே.விஷ்ணுபிரசாத்எம்.பி., எம்.எல்.ஏ.க்கள், சபா.இராசேந்திரன், கோ.ஐய்யப்பன், சிந்தனைச்செல்வன், எம்.ஆர்.ராதாஆகிருஷ்ணன், முன்னாள் எம்.எல்.ஏ,துரை.கி.சரவணன், கிழக்கு மாவட்டக் கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், மேயர் சுந்தரிராஜா, மாநகர செயலர் கே.எஸ்.ராஜா, உள்ளிட்ட தி.மு.க. மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்துக் கொண்டு ஒன்றிய அரசிற்கு எதிராக கண்டன முழக்கமிட்டனர்.



விருதுநகர் தேசபந்து மைதானத்தில் தி.மு.க. கூட்டணி கட்சிகள் சார்பில் வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு திருத்தத்தை எதிர்த்து நகரச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் விருதுநகர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், ராஜபாளையம் தங்கபாண்டியன், சாத்தூர் ரகுராமன், இந்திய கம்யூனிஸ்ட் முன்னாள் எம்.பி. லிங்கம், முன்னாள் எம்.எல்.ஏ ராமசாமி, முன்னாள் எம்.எல்.ஏ. பாலபாரதி உட்பட சுமார் 2000 பேர் கலந்து கொண்டனர்.